**செ. கு. எண்: 129**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 1.6.2013

கோயம்புத்தூர் மாவட்டம், மாவுத்தம்பதி கிராமம், முருகன்பதி மேற்குப் பகுதியைச் சேர்ந்த திரு. ஆறுசாமி என்பவரின் மகன் பாலசுப்பிரமணியம் 21.5.2013 அன்று கோயம்புத்தூர் தெற்கு வட்டம், நவக்கரை பிரிவு, சோளக்கரை மண்திட்டு சரகம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள யானைகள் தடுப்பு அகழி அருகே காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், மூணாடு கிராமம், காரக்குனி பாட்டவயல் என்ற பகுதியைச் சேர்ந்த திருமதி காட என்கிற லீலா, 25.5.2013 அன்று முதுமலை புலிகள் காப்பகத்தில் காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த பாலசுப்பிரமணியம், காட என்கிற லீலா ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த பாலசுப்பிரமணியம் மற்றும் காட என்கிற லீலா ஆகியோரின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா

தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**